# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## *2020 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 07 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2020.02.10 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

## *நிதி (திருத்தம்)*

***2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன்பற்றிய கூற்று**

***வாசகம் 2*** : *இவ்வாசகம், 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 36 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, 2020, சனவரி 1 ஆந் தேதியிலிருந்து பயனுறுவதாக தனிசு மீள்கொடுப்பனவு அறவீடு அறவிடப்படுவதை முடிவுறுத்துவதாகும்.*

நிதி (திருத்தம்)

ச. வ- ஒ. 3/2020

## 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2020 ஆம் ஆண்டின்            ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்கச் சட்டத்தின் 36 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**2.** இரண்டாயிரத்துப் பதினெட்டாம் ஆண்டின் 35 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 36 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில், "2021, திசெம்பர் 31 ஆந் தேதியன்று முடிவடைகின்றதுமான" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2019, திசெம்பர் 31 ஆந் தேதியன்று முடிவடைகின்றதுமான" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.